விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 351 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 19 புதன்கிழமை (04.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தோல்வி கண்ட குழுக்கள் இனவாதத்தை தூண்ட முயற்சி

### சபையில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

தோல்வி கண்ட சில குழுக்கள் நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு 15

## பாராளுமன்றில் என் மீது தாக்குதல் நடத்தப்பட்டது

### அர்ச்சுனா எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தம்மைத் தாக்கியதாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பாராளுமன்றுக்குத் தெரிவாகியுள்ள மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமக்கான நேர ஒதுக்கம் தொடர்பில் அறிந்து கொள்வதற்காகப் பாராளுமன்றில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்குச் சென்றிருந்தபோது தம்மீது தாக்குதல் 15

# நாட்டில் இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

- மாகாண சபை முறை நீக்கப்படாது.
- 3 வருடங்களின் பின்னரே புதிய அரசியலமைப்பு.
- விவசாயிகள், மீனவர்களுக்கு நிவாரணம்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 02

## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் பலி

### உடுப்பிட்டியில் சம்பவம்



(கரணவாய்)

உடுப்பிட்டியில் பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் வடமராட்சி நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த ஓய்வுநிலை 15

## மூன்று நாள் காய்ச்சல் குடும்பஸ்தர் மரணம்

### தொண்டைமானாறில் சம்பவம்

(கரணவாய்)

மூன்று நாள் நீடித்த காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறைச் சேர்ந்த கனகன் சண்முகம் (வயது - 62) என்பவரே உயிரிழந்தவராவார். 15

### பாராளுமன்றை

## இன்று இரவு 9 மணிவரை நடத்த தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை இன்று இரவு 9.30 மணி வரை நடத்துவதற்குகட்சித்தலைவர்கள் கூட்டத்தில் 15

## பயங்கரவாதச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகங்களை நசுக்கும் அநுர அரசு


### பாராளுமன்றில் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகங்களை நசுக்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன் 15



### உள்ளூராட்சித் தேர்தல்

## புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் 15

### பலாலி விமான நிலையத்தில்

## அசௌகரியம் ஏற்பட்டால் உடனடியாக அறிவிக்குக

### வடக்கு மாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையம் ஊடாகப் பயணிப்பவர்கள் ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டால் உடனடியாக அறிவிக்குமாறு வட மாகாண ஆளுநர் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில்,

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலை 15

## இனவாதத்தை தூண்டி நாட்டை தீக்கிரையாக்க எவருக்கும் இடமில்லை

### பாராளுமன்றில் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை



(கொழும்பு)

இனவாதத்தைத் தூண்டி நாட்டை தீக்கிரையாக்க எவருக்கும் இடமில்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

அண்மையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் நாளை (இன்று) பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளேன்.

இனவாதத்தைத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# NALLUR PRADESHIYA SABHA

1. **The Chairman, Procurement Committee Nallur Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the goods and works stated in the Table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Secretary, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil (T.P No: 0212222700, Fax No: 0212220138)** and inspect the bidding documents at **Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvappulam Road, Kokkuvil from 04-Dec-2024 until 17 Dec 2024** between **09:00 AM to 04:00 PM** on public working days.
4. Qualification requirements include: to qualify for contract award are included in Section II (Bidding Data Sheet) and Section III (Evaluation and Qualification Criteria) in the Bidding Document. Additional details are provided in the Bidding Documents.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address **"Secretary, Nallur Pradeshiya sabha, 14/5 Karuvappulam Road, Kokuvil"** on Public Working Days between 09:00 AM to 02:00 PM from 04 Dec 2024 until 17-Dec-2024 and upon payment of a non-refundable fee stated in the Table below. The method of payment will be Cash or Card.
6. Bids must be delivered to **The Chairman, Procurement Committee, Nallur Pradeshiya sabha 14/5 Karuvapulam Road, Kokuvil** on or before **18-Dec-2024 at 10.00AM.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person. All bids must be accompanied by a Bid-Security and the validity periods of bid security as given below.
7. The complete bid should be forward in two copies as original and duplicate. The Original and Duplicate should be enclosed separately and mark original and duplicate respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid Number"** on top left-hand corner of the envelop.
8. The pre bid meeting will be held at **Nallur Pradeshiya sabha on 11-Dec-2024 at 10.00AM.** Interested Bidders may participate in this meeting their own expenses.

| Bid No | Name of Procurement | Estimate Amount [Rs Mn] | Period of Contract | Bid Form Fee | Bid security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required Period |
| NP/14/41/(10)/Acc/Proc/ Supply, Install, Commission and Operationalize Digital Audio Conference System-2024 | Supply, Install, Commission and Operationalize Digital Audio Conference System - 2024 | 3.5 | 30 Days | 1,000.00 | 50,000.00 | 28-Feb-2025 |
| NP/14/41/(10)/Acc/Proc/ Procurement of Colored Waste Bins- 2024 | Procurement of Colored Waste Bins - 2024 | 1.0 | 30 Days | 1,000.00 | 15,000.00 | 28-Feb-2025 |

The Chairman
Procurement Committee
Nallur Pradeshiya sabha, Kokuvil.

(C-1716)

04.Dec.2024

## நாட்டில்...

நாட்டில் இனவாத செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தியேனும் இனவாதத்தினை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள், மீனவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க எதிர்ப்பார்த்துள்ளோம். அரசாங்கம் என்ற ரீதியில் அரிசியினை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அரிசியினை இறக்குமதி செய்வதற்கு தனியாருக்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது. அரிசி தட்டுப்பாட்டு பிரச்சினையை அரசியல்மயப் படுத்துவதற்கு பலர் முயற்சிக்கின்றனர் அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

மேலும், புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர 3 வருடங்கள் வரை செல்லும். அதனால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற முறைமை தொடர்பில் தமது பரிந்துரைகளை அனைவரும் முன்வைக்கலாம். புதிய அரசியலமைப்பு மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே கொண்டுவரப்படும்.

இது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு போதிய கால அவகாசம் உள்ளது. எனவே, மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை.

மாகாண சபை முறைமை புதிய அரசியலமைப்பில் தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரங்கள் வழங்கப்படாது எனவும் தற்போதைய அதிகாரங்கள் குறைக்கப்படாது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேவேளை, 13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் தாம் வெளியிட்ட கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, தேசிய மக்கள் சக்தியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.


இந்தவிடயம் தொடர்பில் விளக்கமளித்துள்ள அவர் 1987 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்தச்சட்டம் வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைக்கத் தவறியுள்ளது என தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மிகவும் நடைமுறைச்சாத்தியமானதும் சரியானதுமான தீர்வினை முன்வைக்க வேண்டியுள்ளது.

எனவே மிகச்சிறந்த தீர்வினை முன்வைத்து நடைமுறைப்படுத்தும் வரை 13வது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் ஒழிக்கப் போவதில்லை எனவுமே தாம் கூறியதாகத் தேசிய மக்கள் சக்தியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## மரண அறிவித்தல்

மலர்வு 1958 - 05 - 08



உதிர்வு 2024 - 12 - 02

## இளையதம்பி சிவகுமார்

துரையன் தோட்டம் நெல்லியடி கரவெட்டி வடக்கினைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவகுமார் அவர்கள் (02.12.2024) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இலட்சுமி தம்பதியரின் இளைய புத்திரனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகுமார் ஞானேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும் துவாரகன் (Software Engineer - Singapore), அனுதர்சன் (Srilanka Telecom Technician), கபிலாஷன் (Business Management), அஜந்தன் (Software Engineer-Singapore), மருஷன் (Software Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநீபா அவர்களின் மாமனாரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் திருமதி ஆனந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் மேனகா, சுமணா, உமாகாந்தன் ஆகி யோரின் மாமனாரும் வித்தகன், பிரசன்னா, கிரிசாந், பிரசாந் ஆகியோரின் சிறியதந்தையும் வே.செல்வச்சந்திரன், கு.யோகேஸ்வரி, செ.சோதிமலர், வே.சுபேந்திரன், வே.பிரபாகரன், செ.பிரபா ஆகியோரின் மைத்துனரும் க.குணசிங்கம், க.செந்தில்நாதன், த.செந்தில்நாதன் ஆகியோரின் சகலனும் செ.தசாஜினி, பி.சிவச்செல்வி ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2024) புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரின் பிறப்பிடமான துரையன் தோட்டம் நெல்லியடி வடக்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

துரையன் தோட்டம்,
நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

077 6125 250
077 7997 867

(2673)

தகவல்: குடும்பத்தினர்

## தேவை

மில் வேலை தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(ஆண், பெண்)

தொடர்புகளுக்கு :
**076 44 00 816**

(2677)


## பெயர்மாற்ற அறிவித்தல்

தாவடி வடக்கில் வதியும் சோமசுந்தரம் வள்ளியம்மை ஆகிய நான் தேவசகாயம் சின்னப்பா, பொன்னம்பலம் நாகம்மா ஆகியோருக்கு 1942.02.20 ஆம் திகதி யாழ். மாவட்டம் மண்டைதீவு எனுமிடத்தில் பிறந்தேன். என்னுடைய பெயரை சோமசுந்தரம் மணி எனப் பெயர் மாற்றம் செய்யவுள்ளேன் என்பதனை, இதனூடாக இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(C-1719)

சோ.மணி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 05.10.1942 — மறைவு 09.11.2024

கடந்த 09.11.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னவி கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 07.12.2024 சனிக்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 09.12.2024 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்

(2676)


இங்ஙனம் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அஸ்வெசும’ கொடுப்பனவை அதிகரிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

**நாடு முழுவதும் உள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான தனிநபர்கள் பயனடையும் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் மாதாந்திர கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**



அதன்படி எட்டு இலட்சம் பேருக்கு மாதாந்திரம் வழங்கப்பட்டு வந்த 8,500 ரூபா நிவாரணக் கொடுப்பனவு 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறிய நிலையில் உள்ள நான்கு இலட்சம் மக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர 15,000 ரூபா கொடுப்பனவு 17,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

அதேநேரம், 800, 000 பெறுநர்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவுகள் 2025 மார்ச் 31 வரையிலும் மற்றொரு குழுக்களுக்கான கொடுப்பனவு 2024 டிசம்பர் 31 வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேநேரம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனாதை இல்லங்களில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு 6,000 ரூபா உதவித்தொகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அடுத்த பாடசாலை தவணையில் இருந்து இந்த முடிவு அமுலுக்கு வரும்.

பிரதமரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பிரேரணைக்கு அனுமதி கிடைத்ததாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (நி-8)

# உயர்தரப் பரீட்சை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் கனமழை காரணமாக 27ஆம் திகதி முதல் பரீட்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

அதன்படி இன்று முதல் மீண்டும் பரீட்சை ஆரம்பிக்கப்படும் எனவும் இன்றைய தினம் இடம்பெறவுள்ள பாடங்களின் படி பரீட்சைகள் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறாத நாட்களில் நடத்தப்பட்ட பாடங்களை எதிர்வரும் நாட்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# ஊழல் அரசியலை மக்கள் நிராகரித்துள்ளனர்

## இணைந்து செயற்படுமாறு பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை முற்றாக புறக்கணிப்போம். எம்மோடு இணைந்து செயற்பட அனைவரும் முன்வாருங்கள் என பிரதமர் ஹரிணி அமரசூரிய அழைப்பு விடுத்தார்.



ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் மீதான பாராளுமன்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் உரையாற்றுகையில் நீண்டகாலமாக உருவாக்கப்பட்ட நிலையான கொள்கையொன்றை முன்வைத்துள்ளோம்.

பாரம்பரியமான தேர்ந்த அரசியல் ஆட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர். இந்தச் செய்தியை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக, நமது நாட்டின் நிர்வாகம் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்தது. இதன் காரணமாக அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது.

ஊழல் மிகுந்த அரசியல் கலாசாரத்தை மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

மக்கள் நிராகரிப்பது அரசியலை அல்ல அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அரசியல் கலாசாரத்தையே நிராகரிக்கின்றார்கள்.

ஒருபோதும் காணாத பெண்களின் பிரதிநிதித்துவம் தற்போது பாராளுமன்றில் காணப்படுகிறது.

மேலும் எமது அமைச்சரவையில் உரிய துறையுடன் மிகவும் பொருத்தமானவர்களையே அப் பதவிகளுக்கு நியமித்துள்ளோம். தேசிய பட்டியல் விடயத்திலும் நாம் பல்வேறு கருத்துகளை உள்வாங்கி சரியானவர்களை நியமித்தோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# அமெரிக்க உயர்மட்ட பிரமுகர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவரின் வருகை பிராந்திய செழிப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு தெற்காசியாவின் முக்கிய பங்காளிகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் ஊழலுக்கு எதிராகப் போராடுதல் மற்றும் மக்கள் உறவுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றில் அமெரிக்கா - இலங்கை கூட்டு முயற்சிகளை முன்னெடுப்பதற்காக டொனால்ட் லூ நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கனகரத்தினம் கபிலன் (அதிபர்-யா/கரம்பொன் சண்முகநாத ம.வி)

திரு. கனகரத்தினம் பிறேமநாத் (உதவி அதிபர்-கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்)

திரு. இராசதுரை சிவநாதன் (அதிபர்-யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்)

திருமதி. மதிவதனா கஜன் (உதவி அதிபர்-கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

திருமதி. சிவானி கேதீஸ்வரன் (அதிபர்-கலட்டி மெ.மி.த.க பாடசாலை)

திருமதி. ரூபகௌரி முகுந்தன் (உதவி அதிபர்-யா/ இந்து மகளிர் கல்லூரி)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றி அதிபர் சேவையில் பதவி உயர்வு பெற்று சென்றமையிட்டும் மென்மேலும் பல பதவி உயர்வு பெற வாழ்த்துகின்றோம்

Congratulations

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(C-1712)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள் - 2024

## காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ), சந்திரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி - ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு - அஷ்டம ஸ்தானத்தில் குரு(வ) - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் சுகஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் சின்ன விடயங்களுக்கு கூட உங்களுக்கு கோபம் வரலாம். எனவே கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். எதிர்பாராத பணத்தேவை உண்டாகும். அதனை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். எதிலும் இழுபறியான நிலை காணப்படும். அடுத்தவர்களால் தொல்லைகள் உண்டாகலாம் கவனம் தேவை.

தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் பதற்றமும் வீண் அலைச்சலும் இருக்கும். வீண் பகை உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து எதிர்பார்த்ததை விட குறையக் கூடும். கடன் விடயங்களை தள்ளிபோடுவது நல்லது. புதிய நபர்களுக்கு பொருட்களை வழங்கும் போது கவனம் தேவை.

எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பதற்றம் உண்டாகலாம். கவனம் தேவை. பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்களை சாதகமாக செய்து முடிக்க முடியும். எதிர்பார்த்த தகவல் தாமதப்படலாம்.

கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும். உயர்நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் கவனம் தேவை. வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம்.

அரசியல்துறையினருக்கு எதிர்பார்த்த பண வரவு இருக்கும். தேவையான வசதிகள் கிடைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரம்




சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். பழைய சிக்கல்கள் தீர்வதில் தாமதம் ஏற்படும்.

மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் பின்னடைவு ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. திடீர் பதற்றம் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளை தலைதூக்கச் செய்யும். எனவே சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களை பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சுவாதி:** இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்தையும் எதிர்கொள்ளும் மனவலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். நட்சத்ராதிபதி ராகுவின் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும்.

**விசாகம் 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.

**பரிகாரம்:** மாரியம்மனை வெள்ளிக்கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபட சகல நன்மைகளும் உண்டாகும். தடை தாமதம் நீங்கும் ;

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி

**அதிஷ்ட தினங்கள்:** 7, 8

**சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15

## தொழிலில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும்



**கிரகநிலை** - ராசியில் சூரியன், புதன்(வ), சந்திரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் சனி - பஞ்சம ஸ்தானத்தில் ராகு - களத்திர ஸ்தானத்தில் குரு(வ) - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - இலாப ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுகஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் பேச்சு திறமையால் காரிய வெற்றிகள் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விடயங்களால் மனநிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கி விருத்தியடையும். பொருட்களை வெளியூருக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம்.

கணவன் -மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது. எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். திட்டமிட்டு செயற்படுவது நல்லது. பெண்களுக்கு பேச்சு திறமையால் காரியங்களை எளிதாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். சின்ன விடயங்கள் கூட மன நிறைவு தரும்படி நடக்கும்.

கலைத்துறையினருக்கு யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயற்பாட்டால் பாராட்டு கிடைக்கும்.

சிலருடன் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். அரசியல் துறையினருக்கு எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும்.

அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதை கழிப்பீர்கள். தொழிலில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடை நீங்கி முன்னேற்றம் உண்டாகும்.




போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும் எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும்.

**அனுஷம்:** இந்த மாதம் இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும். கடன் பிரச்சினை குறையும். முன்னேறத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கேட்டை:** இந்த மாதம் மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். சந்திரன் சஞ்சாரம் உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம் அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமையில் நவகிரகத்தில் செவ்வாய்க்கு தீபம் ஏற்றி வணங்க எல்லா காரியங்களும் வெற்றி பெறும். மனத் துணிவு உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ;

**அதிஷ்ட தினங்கள்:** 9, 10

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயுவின் விலையை மீளாய்வு செய்வதில்லை என நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி பழைய விலைக்கே எரிவாயு விற்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்தார்.

அதன்படி, 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டர் 3,690 ரூபாவிற்கும் 5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.1,482 என அந் நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 694 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-8)

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு

கார்த்திகை 25 - மார்கழி 10

04 மார்கழி 2024

"பெண்களை மதிப்புமிகுந்த உணர்வுகளோடு அணுகுவோம்."

16 2024

(சி-1711)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 29.05.1960 இறப்பு 01.12.2024

## அமரர். அன்னலிங்கம் செந்தில்குமரேசன்

(விவாகப் பதிவாளர்-வலிகாமம் வடக்கு, பிறப்பு, இறப்பு பதிவாளர்-உடுவில், சமாதான நீதிவான்)

யாழ்.மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து மக்களுக்கான சிறந்த சேவையினை ஆற்றி அண்மையில் இறைபதம் அடைந்த **அமரர். அன்னலிங்கம் செந்தில்குமரேசன்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

பிரிவால் துயருறும்

யாழ்.மாவட்டம். விவாக,பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தினர்.

(1709)

# இராசிபலன்

04.12.2024
கார்த்திகை 19, புதன் கிழமை
திருதியை பிற்பகல் 1.09 மணிவரை

பூராடம் பிற்பகல் 5.36 மணிவரை
சுபநேரம் -4.45-6.15 மணிவரை
இராகுகாலம் 12.15-1.45மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் -
ரோகினி,மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுக எதிர்ப்புகள் மாறும்.

**கடகம்:** வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.

**துலாம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனக்குழப்பம் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வரவைக்காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத்தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர், நட்பு வட்டம் விரிவடையும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வாக்குறுதியைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**பேராசை முடிகிற இடத்தில் தான் சந்தோசம் தொடங்குகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய செய்கை பாதிப்பு கடன்களை தள்ளுபடி செய்க

## விவசாயிகள் கோரிக்கை


**(மன்னார்)**

**சீரற்ற காலநிலையால் விவசாயச்செய்கை அழிவடைந்துள்ளதாகவும் வங்கிக்கடன்களை மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்யுமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கடந்த ஒரு வார காலமாக நிலவி வந்த சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் 7603 ஹெட்டேயர் விவசாயச் செய்கை அழிவடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

இம்முறை மன்னார் மாவட்டத்தில் காலபோக செய் கைக்கு என 11.776 ஹெக் டேயர் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 4173 ஹெக்டேயர் விவசாயச் செய்கை மாத்திரமே தற்போது பகுதி அளவில் காப்பாற்றப்பட்டுள்ளது.

அதே வேளை கிளிநொச்சி புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட துவரை ஆற்றை அண்டிய பகுதிகளில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள அனர்த்தத்தினால் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.இந்த நிலையில் இம்முறை விவசாய செய்கைக்காக பல விவசாயிகள் அரச மற்றும் தனியார் வங்கிகளிலும், கிராம மட்ட அமைப்புக்களிலும் கடன்களை பெற்றுள்ள நிலையில் அவற்றை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் தள்ளுபடி செய்து தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-285-316)



### சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.பலாலி வீதி ஊரெழுவில் அமைந்துள்ள என்.கே.மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் எஸ்.வை.சுதாகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.எஸ். குணசீலன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ஆன் அனிற்றா கலையரசன், ஊரெழு என்.கே. மண்டப உரிமையாளர் ந.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-8)

### இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் தேவைகருதி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு பலாலி வீதி கோண்டாவில் சந்தி அருகாமையில், குட்டிச்சுட்டி முன்பள்ளியில் இடம்பெறும். எனவே குருதித்தானம் தன்னார் வளர்களை குறித்த முகாமில் கலந்து கொண்டு குருதித் தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)




## தசாக கிருஹயக்ஞ அறிவித்தல்



குரோதி வருஷம் கார்த்திகை மாதம் 11 ஆம் நாள் (26.11.2024) செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவில் ஸ்தாபக வழித்தோன்றலும் ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய

**கௌசிக கோத்திர பிரம்மஸ்ரீ. குருசாமிக்குருக்கள் கோபாலன்சர்மா**

அவர்களின் தகனக்கிரியைகள் நல்லூர் செம்மணி இந்து மயானத்தில் 27.11.2024 புதன்கிழமை நடைபெற்றன. அன்னார் ஸ்வர்க்கீயஸ்ரீ.குருசாமிக்குருக்கள்-சீதாலட்சுமி அம்மாவின் நான்காவது மகனும் ஸ்வர்க்கீயஸ்ரீ. சுப்ரமண்யசாஸ்திரிகள் கமலாதேவியின் மூத்த மருமகனும் லக்ஷ்மிதேவியின் அன்புக் கணவரும், மைதிலிதேவி, அன்னபூர்ணா கைலாஷ்சர்மாவின் அன்புத் தந்தையும், கணேஷ சர்மா வெங்கடேஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காதம்பரீ. சாய்கிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சரஸ்வதிதேவி, ராதாகிருஷ்ணசர்மா, பாலகிருஷ்ணசர்மா, நந்தினிதேவி,நிர்மலாதேவி, விசாலாக்ஷி,கல்யாணி, மகாலக்ஷ்மி, நவநீதகிருஷ்ணசர்மா ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், அத்திம்பேரும் ராஜகோபாலசர்மா (கோப்பாய்), ஸ்வரக்கியஸ்ரீ சங்கர நாராயணசர்மா, ஸ்வாமிநாதசர்மா(மாவிட்டபுரம்) ஸ்ரீ ராமசந்திர சர்மா(குஜராத்).வெங்கடேசசர்மா(பொன்னேரி), பாலகைலாசநாதசர்மா(சுதுமலை) ஆகியோரின் அன்புச் சகலனும் அகிலாண்டேஸ்வரி, பத்மாவதீ, கிருஷ்ணவேணீ ஆகியோரின் அத்திம்பேரும் ஆவார். அன்னாரது தகனத்திற்கு பின்னரான அபரக்கிரியைகள் இந்தியாவின் சென்னையிலுள்ள அவரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெற்று காசியில் நிறைவு பெறும்.

05.12.2024 வியாழக்கிழமை-தசாகம்,ப்ரபூதபலி
06.12.2024 வெள்ளிக்கிழமை-ஏகோதிஷ்டம்,மாசிகம் வ்ருஷபோத்ஸர்ஜனம்,கோதானம்
07.12.2024 சனிக்கிழமை-சபிண்டீகரண சிரார்த்தம்
08.12.2024 ஞாயிற்றுக்கிழமை-சுபஸ்வீகாரம் கிருகயக்ஞம் (2664)

தகவல்: சு.ராதாகிருஷ்ணசர்மா
+91 8248 919 535, +91 9952 938 284


## நயினாதீவு வைத்தியசாலைக்கு புதிய ஸ்கான் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்கு புதிய அல்ட்ரா சவுண்ட் ஸ்கா னிங் இயந்திரமொன்று வழங்கி வைக்கப்படவுள்ளது.

நயினாதீவு வைத்தியசாலையின் அவசரத் தேவையான ஸ்கானர் இயந்திரம் வாங்குவதற்கு ஜேர்மனி நாட்டில் வசிக்கும் ஜெசிந்தா வாசன் மூலம் 75 இலட்சமும், நயினை மக்கள் அறக்கட்டளை மூலம் 20 இலட்சமும் ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த இயந்திரம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை அன்று நன்கொடையாளர் களால் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரிடம் நயினா தீவு வைத்தியசாலையில் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## கலை விழாவும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆங்கில, தமிழ்மொழி மூலமான பாலர் பாடாலையின் கலை விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று காலை 8.30 மணிக்கு நாச்சிமார் கோவில் காமாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜே.பி.கி. சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ச.க.கண்ணதாஸ் மற்றும் யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியை திருமதி.கண்ணதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-8)

## கலாசாலையில் ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கிறிஸ்தவ மன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று புதன் காலை 8:30 மணிக்கு கிளாஸ் சாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் அ.ஜேம்ஸ் மெய்ஷான், யாழ்.மறை மாவட்ட மறைக் கல்வி நடுவுநிலைய இயக்குனர் அருட்பணி டியூக் வின்சென்ட் அடிகளார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி நீக்கப்பட்ட நிஹால் தல்துவ

## பொலிஸ் துறையில் அதிரடி மாற்றங்கள்



(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இதன்படி புதிய பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளராக கே.பி.மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மனதுங்க இதற்கு முன்னர் கந்தளாய் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியிருந்தார். (நி-8)

# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 45,600 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் 3,178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக பல நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இரண்டு நாட்களுக்கும் அதிகமாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தால் வைத்தியரின் ஆலோசனையை பெற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-8)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (595)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



# வேலைவாய்ப்பு

No.198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS (PVT) LTD AIR TICKETING அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் (Sabre System தெரிந்தவர்கள்) விரும்பத்தக்கது. அல்லது அனுபவமற்றவர்களுக்கு (Training) கொடுக்கப்படும்.

தொடர்புக்கு:
021 222 8555, 077 108 3482 (714)


# பெயர் மாற்ற அறிவித்தல்

V.C.C மாவிட்டபுரம், தெற்கு, தெல்லிப்பழை எனும் முகவரியில் வசிக்கும் ஜெயராஜா நாவேந்தன் எனும் பெயரை 04.12.2024 ஆம் திகதியிலிருந்து ஜெயராஜா ஜெஜவேந்தன் எனப்பெயர் மாற்றம் செய்கிறோம். எனவே இனிவரும் காலங்களில் இவர் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவார் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

திரு.திருமதி. ஜெயராசா சுபோதினி
(பெற்றோர்கள்)

(2660)

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதியிலுள்ள கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 04.12.2024 தொடக்கம் 17.12.2024 ஆம் திகதி வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 மணிவரை (அலுவலக நேரம்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :- 18.12.2024 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 18.12.2024 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும்இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்,

**கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதியிலுள்ள 10 கடைகளுக்கான கேள்வி அட்டவணை கீழ்த்தரை**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 01 | கடைஇல 01 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 02 | கடைஇல 02 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 03 | கடைஇல 03 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 04 | கடைஇல 04 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 05 | கடைஇல 05 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 06 | கடைஇல 06 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 07 | கடைஇல 07 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 08 | கடைஇல 08 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 09 | கடைஇல 09 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |
| 10 | கடைஇல 10 | 1,000.00 | 50,000.00 | 4,080,000.00 |

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி என்பவற்றுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமூகமளித்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **18.12.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு** முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு **18.12.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு
08. சித்திகரக் குத்தகைதாரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.
09. மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும் தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
10. முற்குறிப்பிட்ட 8, 9 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
11. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன், மகள்).
12. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
13. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
14. சித்திகர கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
15. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
16. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
17. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரியினை வருடாந்தம் செலுத்தி வரிச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
18. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் செயலாளரிற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
19. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசச்பையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.செ.செல்வகுமார்
செயலாளர்,
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி

(சி-1710)

திகதி:- 04/12/2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# பெங்கல் புயல் தாக்

# திருவண்ணாமலையில் மண்

## • மண்ணில் புதையுண்ட எழுவர்
## • மீட்கப்படும் உடல்கள்
## • கதறும் உறவுகள்

(சென்னை)

**திருவண்ணாமலையில் மகாதீபம் ஏற்றப்படும் மலையில் ஏற்பட்ட திடீர் மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.**





பெங்கல் புயலின் தாக்கத்தால் திருவண்ணா மலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த 1 ஆம் திகதி இரவு முதல் கன மழை கொட்டியது.

திரு வண்ணாமலையில் மகா தீபம் ஏற்றப்படும் 2,668 அடி உயர அண் ணாமலை யில் இருந்து வழிந்தோடிய மழை நீரால் நகரம் முழு வதும் வெள்ளக்காடாக மாறி யது.

மலை அடிவாரத்தில் உள்ள கிராமங்கள் மற் றும் கிரிவல பாதையை ஒட்டியுள்ள குடியிருப் புகளில் மழைநீர் சூழ்ந்தது. அப்போது, மகா தீபம் ஏற்றப் படும் மலையில் திடீரென மண்சரிவு ஏற்பட் டது.

மலையில் இருந்து கற் கள், ராட்சத பாறைகள் உருண்டு வந்தன. வீடு களின் முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனங்கள். வீட்டு உபயோகப் பொருட்கள் அடித்து செல்லப்பட்டு, மண்ணில் புதைந்தன. மலை அடிவாரத்தில் உள்ள 4 வீடுகள் மண் சரிவில் சிக்கிக் கொண்டன.

அந்த வீடுகளில் இருந்த 7 பேர் மண்சரிவில் சிக்கியதாக தகவல் வெளியானது. திரு வண்ணாமலை தீயணை ப்பு துறையினர் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட் டனர். இதற்கிடையே, தேசிய பேரிடர் குழுவினர் 35 பேர் வர வழைக்கப்பட்டு, 2 ஆவது நாளாக நேற்றும் மீட்பு பணி நடந்தது.

விட்டுவிட்டு மழை பெய்த

## லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்
# 11 பேர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

போர் நிறுத்தத்திற்கு மத்தியில் லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குத லில் 11 பேர் கொல்லப்பட்ட னர். மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் காசா பகு தியை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஹமாஸ் பயங் கரவாத அமைப்புக்கு இடையே கடந்தாண்டு ஒக் டோபரில் போர் தொடங்கி யது. அண்டை நாடான லெபனானில் இருந்து இயங்கும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பு, ஹமாஸ் அமைப்புக்கு ஆத ரவாக, இஸ்ரேல் மீது தாக் குதல்களை நடத்திவந்தது.

இந்த இரண்டு பயங் கரவாத அமைப்புகளுக்கும் ஆதரவு அளித்து வரும் ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 14 மாதங்களாக மும்முனை தாக்குதல்களை இஸ்ரேல் சந்தித்து வந்தது. ஒரு பக்கம் ஹமாஸ் அமைப்பை கட்டுப் படுத்திய நிலையில் கடந்த சில மாதங்களாக ஹிஸ் புல்லா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரமாக்கியது. அதன் முக்கிய தலைவர்கள் ஒவ்வொருவராக கொல்லப் பட்டனர். மேற்காசியாவில் பதற்றம் நிலவி வந்தது.


இந்நிலையில், இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடான பிரான்ஸ் முயற்சிகள் மேற் கொண்டன. இதன்படி, இஸ் ரேல் மற்றும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்புகள் போரை நிறுத்துவதற்கு ஒப் புக் கொண்டன. இதற்கான உடன்பாடு ஏற்பட்டு நவ. 27 ஆம் முதல் அமுலுக்கு வந்தது. அடுத்த 60 நாட்களுக்கு இரு தரப்பும் எந்தத் தாக்குதல் களையும் நடத்தக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

க்கம்

னசரிவு



த 7
தாக
திரு
ண
ந்து
பில்
யே,
னர்
ட்டு.
றும்
ய்த

நிலையில், மகாதீப மலையில் மேலும் 2 இடங்களில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 1965 ஆம் ஆண்டுக்கு பிறகு புயலின் தாக்கம் அதிகளவு இருந்துள்ளது. திருவண்ணாமலையில் இதுவரை மண்சரிவு ஏற்பட்டதே இல்லை என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (நி-8)

---

லெபனானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல் படைகள் தங்களுடைய எல்லைக்கு திரும்ப வேண்டும் என்பது தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் முக்கிய அம்சங்கள்.ஆனால் போர் நிறுத்த ஒப்பந்தம் காற்றில் பறந்தது. இஸ்ரேல் லெபனான் முழுவதும் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.அப்போது, இஸ்ரேலின் இராணுவமும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்புகளும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் லெபனானில் 11 பேர் கொல்லப்பட்டனர். ஹிஸ் புல்லா படையினர் முதலில் தாக்குதல் நடத்தியதால், நாங்கள் பதில் தாக்குதல் நடத்தினோம் என இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்தனர். (நி-8)

## நியூஸிலாந்தில் பறவைக்காய்ச்சல் ஏற்றுமதிக்குத் தடை



(வெலிங்டன்)

நியூஸிலாந்தின் தென் தீவில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் பறவைக் காய்ச்சல், நோய்க்கிருமி மாறுபாடு கண்டறியப்பட்டதை அடுத்து, அனைத்து கோழி ஏற்றுமதிகளையும் நிறுத்திவிட்டதாக நியூஸிலாந்து அறிவித்துள்ளது.

Ktago பகுதியில் உள்ள ஒரு கிராமப்புற கோழி பண்ணையில் ui7N6 துணை வகை பறவை காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து அரசாங்கம், அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந் நிலையில், நன்கு சமைத்த முட்டை மற்றும் கோழிப் பொருட்களை உட்கொள்வது பாதுகாப்பானது என நியூஸிலாந்தின் உயிரியல் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

## மசூதிகளில் ஒலிபெருக்கி பயன்படுத்த இஸ்ரேல் தடை



(ஜெருசலேம்)

இஸ்ரேல் நாட்டில் உள்ள மசூதிகளில் ஒலி பெருக்கி பயன்படுத்த தடை விதிக்குமாறு அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதாமர் பென் க்விர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், மசூதிகளில் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கிகளை பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் தடையை மீறி ஒலிபெருக்கிகள் பயன்படுத்தும் மசூதிக்கு அபராதம் விதிக்க வேண்டும் என்று அமைச்சர் உத்தர விட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் இதாமர் பென் க்விர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், "மசூதிகளில் இருந்து வரும் சத்தம் இஸ்ரேல் மக்களுக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

பெரும்பாலான மேற்கத் தேய நாடுகளும் சில அரபு நாடுகளும் கூட ஒலிபெருக்கி சத்தம் தொடர்பான விடயத்தில் பல சட்டங்களை இயற்றியுள்ளன" என்று பதிவிட்டுள் ளார்.இஸ்ரேல் அரசின் இந்த உத்தரவுக்கு அந்நாட் டின் எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. (நி-8)

## பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால் நிலைமை படுமோசமாகிவிடும்

### ஹமாஸிற்கு காலக்கெடு விதித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

"காசா பிணைக் கைதிகளை ஜனவரி 20 ஆம் திகதிக்குள் விடுவிக்காவிட்டால் நரக வேதனை அனுபவிக்க வேண்டி இருக்கும் என ஹமாஸ் அமைப்புக்கு அமெரிக்கா ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டொனாலட் ட்ரம்ப் கெடு விதித்துள்ளார்.

கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேல், ஹமாஸ் இடையே போர் நடக்கிறது. ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் வசித்து வந்த 250 இற்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக அழைத்து சென்றனர். காசாவில் இன்னும் இரகசியமாக அடைத்து வைக்கப்பட்டுள்ள 101 வெளிநாட்டு மற்றும் இஸ்ரேலிய பிணைக் கைதிகளில் பாதிபேர் உயிருடன் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலில் 44,400இற்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என காசா அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அமெரிக்கா ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் பிணைக் கைதிகளை விடுவிக்குமாறு ஹமாஸ் அமைப்புக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளார். அவர் கூறியிருப்பதாவது, அமெரிக்காவின் ஜனாதிபதியாக நான் பெருமையுடன் பதவியேற்கும் திகதியான ஜனவரி 20, 2025 இற்கும் முன், காசா பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால் நரக வேதனை அனுபவிக்க வேண்டி இருக்கும்.

மனித குலத்திற்கு எதிரான அட்டூழியங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அமெரிக்காவின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு பின்விளைவுகளை, ஹமாஸ் அமைப்பு சந்திக்க வேண்டி இருக்கும் என அவர் தெரிவித்தார்.

எஞ்சிய பிணைக்கைதிகளை விடுவிப்பதற்கான எந்தவொரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக போரை நிறுத்தவும், காஸாவிலிருந்து இஸ்ரேல் படையினர் முழுமையாக வெளியேறவும் ஹமாஸ் அழைப்பு விடுத்துள்ளது. ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை போர் தொடரும். இஸ்ரேலுக்கு இனி எந்த அச்சுறுத்தலும் இல்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் நளீம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸைப் பிரதிநிதித்து வப்படுத்திய எஸ். எம்.நளீம் நேற்று சபா நாயகர் அசோக ரன் வல முன்னிலையில் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண் டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு 87,038 வாக்கு களைப் பெற்று 2 ஆசனங்களை வென்றது.

இதன்படி, கட்சிக்கு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்று கிடைத்துள்ளதுடன், அந்த எம்பி பதவிக்கு அவரை நியமிக்க கட்சி தீர்மானித்திருந்தது.இவர் இதற்கு முன்பு ஏறாவூர் நகராட்சியின் முன் னாள் தலைவராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இலங்கை வர மறுக்கும் பசில்

## பெரமுன தலைவர் பதவியில் மாற்றம்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் அடுத்த தலைவராக நாமல் ராஜபக்ஷவை முன்னிறுத்துவதற்கான செயற் திட்டங்களை அக்கட்சி முன்னெடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

அதன் பிரகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை நாமல் ராஜபக்ஷவே வழி நடத்துவார் என்று அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முன்னாள் அமைச்சரும், பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ, தற்போதைய நிலை யில் இலங்கைக்கு திரும்பி வரும் உத்தேசத்தில் இல்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை கட்சியின் அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷவே வழிநடத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (நி-8)

# சுண்டிக்குளம் கடற்பரப்பில் 18 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பணம்)

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் கடற்பரப்பில் நேற்று அதிகாலை அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்போது, மீன்பிடி படகொன்றையும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார். கைதான இந்திய மீனவர்கள் அனைவரும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு, மேலதிக விசாரணைக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (6-8-33)


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகள் மற்றும் சபைக்கு சொந்தமான கடை என்பற்றினை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனு கோரல் அறிவித்தல் -2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :-04.12.2024 தொடக்கம் 17.12.2024 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 18.12.2024ஆம் திகதி மு.ப.11.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 18.12.2024 ஆம் திகதி மு.ப.11.00 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

கேள்வி அட்டவணை

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT2/01 | ரூபா 12,000,000.00 | ரூபா 50,000.00 | ரூபா 180,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT2/02 | ரூபா 10,800,000.00 | ரூபா 45,000.00 | ரூபா. 162,000.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/01 | ரூபா 2,400,000.00 | ரூபா 10,000.00 | ரூபா 36,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/02 | ரூபா 1,920,000.00 | ரூபா 8,000.00 | ரூபா 28,800.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/01 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/02 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/04 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/05 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/06 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/07 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/08 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள நகரசபைக்கு சொந்தமான கடை

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| NBS 02 | ரூபா 1,680,000.00 | ரூபா 7,000.00 | ரூபா 25,200.00 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 17ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது..
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று வலுவுடைய மனிதரும் மாண்புடைய மாணிக்கங்களே!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

டிசம்பர் 3 அதாவது நேற்றையதினம் உலக மாற்று வலுவுள்ளோர் தினமாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் முதுமொழி பலருக்கு கனவாகவே மாறி விட்டது. நோயின்றி எவரும் இல்லை என்னும் நிலைமைக்கு நாம் வந்து நிற்கின்றோம்.

குடும்பப் பின்னணியும் குல கோத்திரமும் பல நோய்களை எம்மையறியாமலேயே எங்களுக்குள் திணிக்கப்பட்டு விட்டிருக்கின்றன. அன்றாடம் நோயற்ற செல்வத்தை நோக்கிய எமது பயணம் முழுமை பெறாமலேயே நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.

இன்று கூடியிருந்தவர் அடுத்த நிமிடம் பிணமாகி நினைவுகளிலேயே தங்கிவிடுகின்றனர். நமது வாழ்க்கையின் பாதையில் எம்மோடு ஒட்டிவிளையாடியவர்கள் கூடிவந்தவர்கள் இடையிலேயே அவயவங்களை இழந்து செயலிழந்து மாற்றுவலுவுடையவர்களாக மாறும் நிலைமை மிகவும் கவலைக்குரியது. உலகளவில் 1.3 பில்லியன் மக்கள் மாற்றுவலுவுள்ளவர்களாக கணிக்கப்பட்டுள்ளது. அது உலக சனத்தொகையில் 16 சதவீதமாகும். எமது நாட்டில் கிடைத்தற்கரிய 2012 ஆண்டுக்கான தரவின் படி 8.7 சதவீதமானவர்கள் ஏறக் குறைய 16 இலட்சம் மக்கள் மாற்றுவலுவுடையவர்களாகும். அதில் 57 சதவீதத்தினர் ஆண்களாகவும் 43 சதவீதத்தினர் பெண்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளனர். எமது நாட்டில் 2023 ஆம் ஆண்டில் 10 சதவீதமான மாற்றுவலுவுடையவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.


பிறப்பிலேயே மாற்றுத்திறனாளிகளாக உருவம் பெற்ற மாண்புக்குரிய மனிதர்களை நாம் மனதளவில் சொல்லால் செயலால் நோகடிக்கக் கூடாது. அவர்கள் இறைவனின் திருக்குழந்தைகளாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

சிவபூமியின் செயலாக்கங்கள் இங்கொரு முன்னுதாரணம். ஆறுதிருமுருகனின் திருப்பணியின் அர்ப்பணிப்பால் பலரின் வாழ்க்கைக்கு அர்த்தத்தை கொடுத்திருக்கின்றது. இப்படியொரு மாண்புடை மனிதரை காணக் கிடைப்பது அரிது. உள்ளதை உள்ளபடி சொல்லுதலும் அன்னவரை மனந்திறந்து பாராட்டுதலும் எம்முள் மனிதத்தை உயர்த்திவிடும். காணக்கிடைக்காத என்றும் நாம் இழந்துவிடக்கூடாத சொத்து அவர். பொதுவெளியில் தன்னிலை தவிர்த்து மற்றவர்க்காய் வாழும் இப்புனித மனிதர்களை சீண்டியும் சுரண்டியும் பார்ப்பதற்கும் கூட்டமிருக்கின்றது. பொதுவெளி என்பது எதையும் எப்படியும் எழுதலாம் என்னும் தான்தோன்றித்தனம் மெத்தனமாகவே கருதப்படும். மற்றையவர்களை இழிவுசெய்யும் கூட்டம் காலப்போக்கில் காணாமலேயே போன கதைகள் பலப்பல.

மாற்றுவலுவுடைய நிலைமை பரம்பரை பரம்பரையாக வருவது மிகக்குறைந்த சதவீதமே. அதனையும் தாண்டி அனைத்து வகை மாற்றுவலுவுடையோருக்கும் பல்வேறு காரணிகள் இக்குறைபாட்டை உருவாக்க காரணமாகியிருக்கின்றன. மருத்துவக் காரணங்களாக கீழ்வாதம், முதுகுவலி, இருதய நோய், புற்றுநோய், மன அழுத்தம், நீரிழிவு, மற்றும் பல காரணமாயிருக்கின்றன. இவற்றுடன் பரம்பரையலகு . திரிவு, மரபணுவிலேற்படும் குறைபாடுகள் இவற்றை தவிர சாராயம் மற்றும் போதைப்பொருட்கள், வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு, போரில் ஏற்பட்ட உடலுபாதைகள், வேலைத்தளத்தில் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பதிலுள்ள சிக்கல்கள் என்பனவும் காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

இதில் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டவற்றை நாம் தவிர்க்க முடியும். எமது கவனக்குறைவாலும் நல்ல பழக்கவழக்கமின்மை காரணமாகவும் இவை ஏற்படுகின்றன.

எது எப்படியிருந்தாலும் மாற்றுதிறனாளிகளை சராசரி மனிதராக கவனித்து அவர்களின் நல்வாழ்வுக்கான வழிகளனைத்தையும் நாம் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானதாகும். மாற்றுத் திறனாளிகளின் திறன்களை விருத்தி செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களும் சமமாக தமது வாழ்க்கையை வாழ வழிகிடைத்துவிடும். ஊனம் என்பது உடலிலல்ல என்பதும் மனதளவில் உள்ளதே ஊனம் என்பதனை நாம் மறந்து விடலாகாது. ஒவ்வொருவரது வீடுகளிலும் இவ்வாறான நிலையிலுள்ளவர்களை குறைபாடுள்ளவர்களாக எண்ணுவதனை நாம் முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாம் அவர்களுடன் சரிசமமாக எந்தவித சலனமுமின்றி பழகவேண்டும். அனைத்தும் உள்ளவர்கள் இவ்வுகிலேது. ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு குறைபாடு இருக்கும் ஆனால் உடலளவில் உள்ள விடயங்களை குறைபாடுள்ளவர்களாக ஒதுக்கி வைத்தல் மனிதனாக பிறந்தவர்களுக்கு நன்றல்லவே.



## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

இங்கே வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என்பன மாற்றுவலுவுள்ளவர்களை உருவாக்குவதில் பங்களிக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. உணவு செய்தல் என்பது அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும் என்னும் பொருளின் முழுஅர்த்தமாகும். எமது நாட்டில் இன்னமும் பசி பட்டினியுடன் ஒவ்வொரு நாளையும் கடக்கும் குடும்பங்களை எமது நாட்டிலேற்பட்ட பொருளாதார சீர்குலைவு அதிகரிக்க செய்துவிட்டது. சராசரி தின செலவுக்கு கூட பணமில்லாமல் பட்டினியுடன் வாழும் குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என பலரின் வாழ்க்கை நிலையை மாற்றும் வழிவகைகள் முன்னுரிமை பெறவேண்டும். இந்த நிலைமையிலேயே குடும்பமொன்றுக்கு தேவையான உணவை அவர்களே உற்பத்தி செய்யும் வழிமுறைகள் வீட்டுத்தோட்டம் அல்லது மனைத்தோட்டம் என்னும் கருப்பொருளினூடாகவே எடுத்துரைக்கப்பட்டது. இதற்கு உந்துதலாகவே பரவிவந்து பல வுயிர்களை காவு கொண்ட கொவிட் 19 வைரஸ் தொற்று கவனத்தை யீர்த்தது. அனைத்து வீடுகளிலும் உணவை உற்பத்தி செய்வதற்கு அனைவரும் முன்வந்தனர்.

தமது உணவை சுகாதார முறையில் பெற்று உணவு தயாரித்து அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்டனர். வீட்டுக்குள்ளேயே வாழ்க்கையை சுருக்கிக் கொள்ளும் அனுபவமும் அனை வருக்கும் கிடைத்தது.

எமது உணவுற்பத்தியில் நாம் இன்னமும் கவனமெடுக்க வேண்டும் என்பதன் அர்த்தம் உணவு மட்டுமல்ல ஊட்டச்சத்தும் அதில் உள்ளடக்கம் என்பதிலிருந்து புரியும்.

எமது தேசத்தில் காணப்படும் அனைத்து உண்ணக்கூடிய பயிர்களும் கிடைக்கின்ற மண் நீர் மற்றும் தொழிநுட்ப வளத்தை பயன்படுத்தி பயிரிட்டு எமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

இந்த கருத்துக்கள் அவ்வப் போது தலைகாட்டுவதும் பின்னர் காலாவதியாகி விடுவதனையும் கவனிக்க முடிகின்றது. எமது தேசத்தில் உணவுற்பத்திக்கான உந்துதல் தொடர்ச்சியாக அனைத்து தரப்பிலிருந்தும் கிளர்ந்தெழும்ப வேண்டும்.

ஆக்க சக்தியாக அனைவருக்கும் தேவைப்படும் உயிர்ச்சக்தியாக உணவு உற்பத்தி பல்வகைத்தன்மையுடையதாக மாற்றம் பெற்று ஊட்டச்சத்து நிறைந்ததாக நம்மூர் உணவாக கிடைக்க வழிசெய்தல் வேண்டும்.

நம்தேசத்து உணவுற்பத்தியில் எமது பயிரினங்களின் உற்பத்தியும் அதற்கான ஊக்கமும் கிடைக்க வழிசெய்தல் வேண்டும். உணவே மருந்து மருந்தே உணவு என்னும் கருப்பொருளின் சாரம்சமும் அது தானே.

அரச கொள்கைகள் மக்களுக்கானதாக பேண்தகு நிலையில் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். விவசாயியை நோகடிக்கும் எந்த கொள்கைவழி செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தல் அவசியம்.

உற்பத்தி பெருக்கத்தில் காட்டவேண்டிய அக்கறை அளப்பெரிது. நம் உணவு, சுத்தமான சுகாதாரமான உணவு, வளமான உணவு, மலிவான உணவு இவற்றுடன் ஊட்டச்சத்தான உணவு இவையனைத்தும் வளமான சந்ததிக்கான அடித்தளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

647





தம்பி சோதிட சாஸ்திரம் பயில்வதற்கு ஞாபக சக்தி மிக அவசியம். கிரகங்கள், நட்சத்திரங்கள், திசைகள், புக்திகள், யோகங்கள் இவை லட்சம் விதமான சேர்க்கை உள்ளவை. அவ்வளவையும் மனத்தில் வைத்துக்கொண்டு வருடம், மாதம் நாள், நாழிகை, விநாடி, ஒரு விநாடியில் நூற்றில் ஒரு பங்கு நேரம்- இவ்வளவையும் கணக்கிட்டுப் பார்த்தல்லவா சொல்ல வேண்டும்? போகட்டும் என் ஜோசியம் முன் பின்னாக இருந்தாலும் என்றாயே? அதன் பொருள் என்ன? நான் உனக்குச் சொன்னது ஒன்றும் பலிக்கவில்லையா?" அதையும் உங்கள் ஜோசியத்திலேயே கண்டுபிடித்துக் கொள்ள வழியில்லையா?

உண்டு, உண்டு! ஜோசியத்தினாலும் கண்டுபிடிக்கலாம் ஊகத்தினாலும் கண்டுபிடிக்கலாம். உனக்கு நான் கூறியவை பலித்துத்தான் இருக்க வேண்டும். இல்லாவிடில் நீ திரும்பவும் இந்தக் குடிசைக்குள் வருவாயா?

ஆமாம், ஆமாம். உம்முடைய சோதிடம் பலிக்கத்தான் செய்தது. அப் படிச் சொல்லு! எந்த விதத்தில் பலித்தது, அப்பனே?

நீர் எனக்குச் சொன்னது அப்படியே பலித்தது. நீ போகிற காரியம் நடந்தால் நடக்கும் நடக்காவிட்டால் நடக்காது என்றீர் அந்தப் படியே நடந்தது. 'நடந்தது' என்று நான் சொல்வதுகூடப் பிசகு. என்னைக் கண்டவுடனேயே ஓட்டம் பிடித்து ஓடிற்று!

தம்பி! நீ பெரிய வேடிக்கைக்காரனாயிருக்கிறாய்!

"உண்மையான வார்த்தை நான் வேடிக்கைக்காரன் தான்! அத்துடன் கொஞ்சம் கோபக்காரன்!" இந்தக் குடிசைக்குள் வரும்போது கோபத்தை வெளியில் மூட்டை கட்டி வைத்துவிட்டு வரவேண்டும்.

"அப்படிச் செய்யலாம் என்றுதான் பார்த்தேன். ஆனால் உம்முடைய சீடனை வீட்டு வாசலில் காணவில்லை. கோப மூட்டையைத் திண்ணையில் வைத்தால் யாராவது அடித்துக்கொண்டு போய் விட்டால் என்ன செய்கிறது என்று உள்ளே கொண்டு வந்துவிட்டேன். உம்முடைய சீடன் எங்கே சோதிடரே? போன தடவை அவன் என்னை வாசலில் தடுத்து நிறுத்தப் பார்த்தது அப்படியே என் நினைவில் இருக்கிறது!"

இன்றைக்கு ஐப்பசி அமாவாசை அல்லவா? அதற்காக அவன் கொள்ளிடக்கரைக்குப் போயிருப்பான்.

"அமாவாசைக்கும், கொள்ளிடக் கரைக்கும் என்ன சம்பந்தம்?" கொள்ளிடக்கரையில் காலாமுகர்களின் மகா சங்கம் இன்று நடைபெறுகிறது. என் சீடன் காலா முகத்தைச் சேர்ந்தவன்."

"சோதிடரே! நான் சைவ மதத்தையே விட்டு விடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்." விட்டுவிட்டு உமது சிநேகிதர் ஆழ்வார்க்கடியார் நம்பி இருக்கிறாரே "திருமலையைச் சொல்கிறாயாக்கும்!"

"ஆம் அவரிடம் தீட்சை பெற்று உடம்பெல்லாம் நாமத்தைப் போட்டுக் கொண்டு வீர வைஷ்ணவனாகி விடலாம் என்று உத்தேசிக்கிறேன்." அது ஏன் அப்படி?


"காலாமுகச் சைவர்கள் சிலரைப் பார்த்தேன். இங்கே வருகிற வழியிலே கூடப் பார்த்தேன். அவர்களையும் அவர்கள் வைத்திருக்கும் மண்டை ஓடுகளையும் பார்த்த பிறகு சைவத்தை விட்டு விடலாம் என்று தோன்றுகிறது." தம்பி! எத்தனையோ போர்க்களங்களைப் பார்த்திருக்கும் உனக்கு மண்டை ஓடுகளைக் கண்டு என்ன பயம்?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவிடம் இருந்த சக்தி



தற்பெருமை பேசுவோர்களைக் கண்டால் முல்லாவுக்குப் பிடிக்காது. அவர்களை எவ்விதமாவது மட்டந்தட்ட அவர் முயற்சி செய்வார். ஒரு தடவை ஒரு மதச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளிநாட்டில் இருந்து மதத் தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

அவர்கள் மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது மதத்தைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ அதிகம் பேசாமல் தங்களுக்கு அதிசய சக்திகள் உண்டு என்றும் தாங்கள் விரும்பினால் நீரில் நடக்க முடியும் நெருப்பில் புகுந்து வெளிவர முடியும், மணலைக் கயிறாக திரிக்க முடியும் என்றும் அவர்கள் புராணத்தை தம்பட்டமடித்தே காலத்தை ஓட்டினர். கடைசியாக நன்றி கூறுவதற்காக வந்த முல்லா தனக்கும் சில சக்திகள் உண்டு என்றும் குறிப்பாக நல்ல இருளில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வழி நடக்க முடியும் என்றும் கூறினார்.

விளக்கே இல்லாமல் அடர்ந்த காட்டில் கூட நல்ல இருளில் முல்லாவால் நடந்து செல்ல முடியுமா? என்று மதத் தலைவர்கள் கேட்டனர். முடியும் என்று முல்லா கூறினார். அன்று இரவு உணவுக்குப் பிறகு முல்லாவின் அந்தச் சிறப்பு ஆற்றலைப் பரிசோதனை செய்து பார்ப்பது என்று முடிவாயிற்று. மதத் தலைவர்களும் உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆங்காங்கே நின்று முல்லாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று உண்மையிலேயே இருள் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் அருகில் இருக்கும் பொருள் கூட கண்களுக்கு தென்படவில்லை. குறுக்கும் நெடுக்குமாக நிற்கும் மரங்களை அடையாளம் கண்டு முல்லா எவ்வாறு இருளில் வருகிறார் என்று பார்க்க எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர்.

சற்றுநேரம் கழித்து முல்லா ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு நடந்து வந்தார். இது என்ன? கைவிளக்கு வெளிச்சத்தில் நடந்து வருகிறீர் இருளில் அல்லவா நடப்பதாக சவால் விட்டீர் என்று மற்றவர்கள் கேட்டனர்.

நண்பர்களே எவ்வளவு பயங்கர இருளாக இருந்தாலும் எனக்குக் கண் நன்றாகத் தெரியும் ஆனால் நடந்து வருவது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? எனக்குப் பதிலாக வேறு ஆளை நடக்கவிட்டு நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்ற அவப் பெயர் நாளை வரக்கூடாதல்லவா? அதனால் என்னை நீங்கள் அடையாளம் கண்டு பிடிப்பதற்காகத்தான் கை விளக்குடன் நடந்து வந்தேன் என்றார் முல்லா.

பிறகு முல்லா அன்பார்ந்த மதத் தலைவர்களே உங்களிடமெல்லாம் ஏதேதோ அமானுஷ்ய சக்தி இருப்பதாகக் கூறினீர்களே அதற்கும் என் சக்தி ஒன்றும் இளைத்ததல்ல என்றார் முல்லா.

தங்களை மட்டம் தட்டவே இப் படி ஒரு நாடகத்தை முல்லா ஆடினார் என்பதை மதத் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நம் சுயமரியாதையில் நிலைத்திருந்தால், அது பிறரும் தன் சுயமரியாதையை மீட்டெடுக்க உதவும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கு இருக்கச் செய்யுங்கள்

பாராளுமன்ற உறுப்பினராகிவிட வேண்டும் என்பதற்காகப் பொதுத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் படும்பாடு சொல்லிமாளா.

அந்தளவுக்கு வேட்பாளர்கள் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதுடன் தேர்தல் காலம் முழுவதும் உறக்கமின்றிக் கடுமையாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவர்.

ஒருமாதிரியாகத் தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுவிட்டால், பின்னர் பாராளுமன்ற ஆசனங்களில் அவர்கள் இருப்பதில்லை.

உண்மை. பாராளுமன்ற அமர்வுகளின் தொடக்க நேரங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரசன்னமாகி இருப்பர்.

அந்நேரத்தில் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய முக்கிய மந்திரிகளும் கட்சித் தலைவர்களுமே உரையாற்றுவர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவர்.

எனினும் முக்கிய மந்திரிகள் உரையாற்றும்போது பாராளுமன்றத்தில் பிரசன்னமாகி இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள்; பின்னர், தமது ஆசனங்களை விட்டு வெளியேறி பாராளுமன்றக் கன்ரீனிலும் இதர இடங்களிலும் பொழுதுபோக்கிக் கொண்டிருப்பர்.

இதனால் அவர்கள், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகளைச் செவிமடுப்பதில்லை.

அதிலும் குறிப்பாக கடந்த காலங்களில் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றபோது, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகையில், பாராளுமன்ற அவை வெறிச்சோடிக் கிடப்பதைக் காண முடிந்தது.

அதாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகையில் பெரும்பாலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் ஆசனங்களில் இருப்பதில்லை.

ஏதோ சபாநாயகர் இருக்கிறார் என்ற ஒரே நம்பிக்கையில், கௌரவ சபாநாயகர் அவர்களே! என அடிக்கடி விழித்து உரையாற்றுகின்ற நடைமுறை மட்டுமே அங்கு இருந்தது.

எனவே நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்திலாவது, பாராளுமன்ற அமர்வுகளின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் முழுநேரமும் பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருந்து சக உறுப்பினர்களின் உரைகளைச் செவிமடுக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகின்ற நேரங்களில் அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரசன்னமாகவும் முழுமையாகவும் இருப்பது மிகவும் அவசியம்.

அவ்வாறு இருக்கும்போதுதான் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அறியவும் அவற்றின் தாற்பரியத்தைப் புரியவும் முடியும்.

ஆக, பாராளுமன்ற அமர்வுகளின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் முழு நேரமும் பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குரிய ஏற்பாடுகளைப் புதிய பாராளுமன்ற விவகாரக் குழு செய்தாக வேண்டும்.

# மாற்றாற்றலுடையவர்கள் ஒருபோதும் நிவாரணம் தருமாறு அணுகுவதில்லை

## சிறந்த முன்னுதாரணமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

மாற்றாற்றலுடையவர்கள் ஒருபோதும் நிவாரணம் தருமாறு எங்களை அணுகுவதில்லை. அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதையே விரும்புகின்றார்கள். இதை சிறந்ததொரு முன்னுதாரணமாக நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மாற்றாற்றலுடையோர் தினமும் புதுப்பிரவாகம் நூல் வெளியீடும், யாழ்ப்பாணப் பிரதேச செயலகத் திறந்தவெளி அரங்கில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலர் சா.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக ஆளுநர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிரகுராமும் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர் மாற்றுத்திறனாளிகள் பலர் எங்களை வந்து சந்திப்பார்கள். அவர்களில் ஒருவர்கூட தமக்கு நிவாரணம் தேவை என்று கேட்டதில்லை. உடலில் எந்தக் குறைபாடுகளும் இல்லாதவர்கள் நிவாரணம் தேவை, அது தேவை, இது தேவை என்று நாடும்போதும் அவர்கள் அப்படி எங்களை நாடியதில்லை. அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நின்று சாதிக்கவே விரும்புகின்றார்கள்.

அவர்களை நாங்கள் ஊக்கப்படுத்தவேண்டும். அவர்களிடம் கடின உழைப்பு இருக்கின்றது. மாற்றாற்றல் உடையவர்கள் அரச அலுவலகங்களை அணுகும் வசதியை உறுதிப்படுத்தும் வகையில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். தற்போதைய யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் அவர்கள் மிகச் சிறந்த ஒருவர் எனக்குறிப்பிட்ட ஆளுநர், அவரைப் போன்ற திறமையான அதிகாரிகள் பலர் இருந்தால் எமது பிரதேசம் விரைவாக வளர்ச்சியடைந்திருக்கும் என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கு, பிரதேச செயலர் சா.சுதர்சன் அவர்களால் நினைவுப்பரிசில் வழங்கப்பட்டது. அத்துடன் மாற்றுத்திறனாளிகளின் ஆக்கங்களை உள்ளடக்கிய புதுப்பிரவாகம் நூல் வெளியிடப்பட்டதுடன், அது கண்பார்வையற்றவர்கள் வாசிக்கக்கூடிய வகையிலும் பிரெயில் வடிவிலும், ஒலி வடிவிலும் வெளியீடு செய்யப்பட்டது. (ம-7,33)

## வவுனியாவில் அரச, தனியார் பேருந்து தரப்பினர் இடையே வாய்த்தர்க்கம்

### நேரக் கணிப்பாளர் மீது தாக்குதல்

வவுனியாவில் அரச, தனியார் பேருந்து தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

நேற்று செவ்வாய்க்கிழமை காலை வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த அரச பேருந்து தரப்பினருக்கும் தனியார் பேருந்து தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அரச பேருந்து புறப்படுகின்ற நேரம் தொடர்பிலேயே குறித்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பேருந்து நிலையப் பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியாப் பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, பேருந்து நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துச் சபையின் நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், அரச பேருந்து ஒன்றும் தனியார் பேருந்தும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. (ம-7,250)

### வவுனியாவில்

## வயல் வெளியில் வீழ்ந்து கிடந்த யானை மரணம்

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானை நேற்று மரணமடைந்ததாக வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா குடாகச்சக்கொடி வயல் வெளியில் சுகவீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கடந்த ஐந்து நாட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே குறித்த யானை மரணமடைந்துள்ளது.

இதேவேளை குறித்த யானையின் மரணம் தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

### மாவீரர் தின நிகழ்வு

## கைது செய்யப்பட்டவரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பான படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்த குற்றச்சாட்டில் காலி - பத்தேகம பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று பத்தேக நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பான படங்களை பகிர்ந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேக நபர் உட்பட நால்வர் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (ம-7)

## மட்டக்களப்பைச் சேர்ந்தவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த மட்டக்களப்பைச் சேர்ந்த 34 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சிகரெட்டுகளையும் மற்றும் வெளிநாட்டுப் பொருட்களைக் கடத்த முயன்றதாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அவரின் பயணப் பொதிகளில் மேற்கொண்ட பரிசோதனையின் போது ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான அழகுசாதனப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில் அடிக்கடி இந்தியா சென்று வருபவர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மாணவர்கள் கல்விக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

விசேட தேவையுடைய மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு 6,000 ரூபாய் உதவித்தொகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


அடுத்த பாடசாலை தவணையிலிருந்து இந்த முடிவு அமுலுக்கு வர உள்ளது.

பிரதமரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவை இரண்டு கட்டங்களாக நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்போ உற்பத்தி பொருட்களின் சந்தைப்படுத்தல் நிகழ்வு



(கிளிநொச்சி)

நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் 2K AGRO PRODUCTS LTD கம்பனியின் ஜம்போ உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்தும் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டு குறித்த விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்குடன் குறித்த விற்பனை பிரிவானது 155 ஆம் கட்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் பணிப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர், முருகண்டி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர், 2K AGRO PRODUCTS LTD கம்பனியின் அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (6-8)

# 23 இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 10 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பிற்கு அண்மையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

23 பேரும் நேற்று யாழ். ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்படுத்தப்பட்டனர்.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் இந்திய மீனவர்கள் 23 பேருக்கும் 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

அத்துடன் குறித்த 23 பேரில் 3 பேர் படகோட்டிகள் என்றமையால் அவர்களுக்கு அபராத தொகையும், 6 மாத சிறைத்தண்டனையும் மேலதிகமாக வழங்கி உத்தரவிட்டார்.

மேலும் அபராத தொகை செலுத்த தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனைக்கு மேல திகமாக 3 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (6-8)

## கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

**வெளிவாரி விண்ணப்பம்**

01. பதவியின் பெயர்: எழுதுநர்

பதவிக் குறியீடு: 302/13

சம்பள அளவுத்திட்டம்: 18 360-160X10-170X10-21660

வெற்றிடங்கள் 01

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தர பத்திர பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஆறு பாடங்களுடனான சித்தி.

02. பதவியின் பெயர்: எழுதுநர்

பதவிக் குறியீடு: 302/ 14

சம்பள அளவுத்திட்டம் 17900-155X10-165X10-21100

வெற்றிடங்கள் 01

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப்பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர்/ கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த் சாதாரண தர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி

**நிபந்தனைகள்**

1. 18-45 வயதிற்கிடைப்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். கூட்டுறவுச்சங்கங்களில் நிரந்தரப்பதவி வகிப்போருக்கு இவ்வயதெல்லை பொருத்தமற்றது என்பதுடன் விண்ணப்பதாரிகள் தத்தமது கூட்டுறவு சங்கங்களினூடாவே விண்ணப்பித்தல் வேண்டும்.
2. சங்கத்தின் தொழிற் பரப்பில் வதிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. விண்ணப்பமுடிவுத்திகதி: 20.12.2024
4. விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

**தலைவர்,**
**கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**கொடிகாமம் வீதி, நெல்லியடி.**

(சி-1713)

04.12.2024

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
### ஐயனார் கோயில் வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உபஅலுவலகத்திற்குப்பட்ட வட்டாரம் 02. ஐயனார் கோயில் வீதியிலுள்ள ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டில் இதுவரை பதிவு செய்யப்பட வில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6152/01.07.1963ஆம் இலக்க உறுதியால் சதாசிவம் வயிரமுத்தாப்பிள்ளை ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது 1963.06.01ஆம் திகதி சமாதான நீதவான் T.வினாயகமூர்த்தி முகதாவில் சத்தியம் செய்ததன் பிரகாரம் என குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டிருந்தது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நாகலிங்கம் வைடூரியமும், நாகலிங்கம் இராசனும் ஆகியவர்கள் தமக்குள் இணங்கி சம்மதித்து ஒருவருக்கொருவர் காணிகளை மாற்றி பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் 5750/05.08.1962ஆம் இலக்கத்தில் காணிமாற்றல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

நல்லதம்பி அப்புத்துரை பெண் இரத்தினம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6255/06.10.1963ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் இராசன் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சின்னத்தம்பி முருகையா பெண் செல்வதி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7816/03.10.1966ஆம் இலக்க உறுதியால் குறித்த நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களினை உள்ளடக்கிய ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை நல்லதம்பி அப்புத்துரையும் பெண் இரத்தினமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5881/03.11.1962ஆம் இலக்க உறுதியால் நாகலிங்கம் அருணாசலம் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது 1962.10.30ஆம் திகதி சமாதான நீதவான் T.வினாயகமூர்த்தி முகதாவில் சத்தியம் செய்ததன் பிரகாரம் என குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது

அப்புத்துரை வீரசிங்கம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 609/06.09.1972ஆம் இலக்க உறுதியால் நல்லதம்பி அப்புத்துரையும், அப்புத்துரை துரைசிங்கமும், அப்புத்துரை மகள் தேவிஅம்மாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நாகலிங்கம் காசிப்பிள்ளை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சண்முகநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 571/15.07.1981 ஆம் இலக்க உறுதியால் குறித்த அப்புத்துரை வீரசிங்கம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சபாபதி சந்திரமனோகரன் பெண் நிர்மலாதேவி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.மு.தர்மராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1759/31.08.1984ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் காசிப்பிள்ளையும் பெண் ஆனந்தமனோகரியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இராஜகுலசிங்கம் பெண் செல்வராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சண்முகநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 896/23.08.2002ஆம் இலக்க உறுதியால் குறித்த சபாபதி சந்திரமனோகரன் பெண் நிர்மலாதேவி ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

செல்லையா நித்தியானந்தமும் பெண் செல்வராணியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7320/ 31.08.2005ஆம் இலக்க உறுதியால் குறித்த கணபதி இராசகுலசிங்கமும் பெண் செல்வராணியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த செல்லையா நித்தியானந்தமும் பெண் செல்வராணியும் ஆகியவர்கள் தற்போது ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லையா நித்தியானந்தமும் பெண் செல்வராணியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(2665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று நாள்...

காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவரினால் நடக்க முடியாமையால் காலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பதில் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60)

## பாம்பு தீண்டி...

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் உத்தியோகத்தரான இளையதம்பி சிவகுமார் (வயது-66) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள தோட்டத்தில் தனது மாட்டினை மேய்ச்சலுக்காகக் கட்டியபோது பாம்பு தீண்டியுள்ளது.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## பயங்கரவாதச்...

படுத்தி ஊடக வேட்டையில் ஈடுபடுவது நியாயமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்வளவு பெரிய ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகத்துறையிலிருந்து உங்களுக்கு நிறைய ஆதரவு கிடைத்தது.

ஆனால் இந்த நேரத்தில் இந்த சமூக ஊடக ஆர்வலர்கள் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வேட்டையாடப்படுகிறார்கள்.

நீக்கப்படும் என்று கூறப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தை நிறுத்துங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(ம-7)

## அசௌகரியம்...

யத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள், அங்குள்ள அதிகாரிகளால் ஏதாவது அசௌகரியங்களை எதிர்கொண்டால் விமான நிலையத்தின் செயற்பாட்டு முகாமையாளர் அமரதுங்க 077 465 3915 என்ற இலக்கத்துக்கோ அல்லது வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் 021 221 9373 என்ற இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## இன்று...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற வானிலையினால் ஏற்பட்ட அனர்த்த நிலை தொடர்பில் இன்று மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப்பாராளுமன்றத்தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.(ம-7)

## பாராளுமன்றில்...

நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் கருத்துரைத்த நளின் பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்பாக முறையற்ற விதத்தில் செயற்பட்டதாகவும் முறையற்ற வசனங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் இந்த விடயம் குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

இதேவேளை அவரைத் தொடர்ந்து எழுந்த பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகவும் அவர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். (ம-7)

## தோல்வி...

கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாட்டு மக்களர் இனவாதம் மற்றும் சந்தர்ப்பவாத அரசியலை நிராகரித்துள்ளனர். தேர்தல் முடிவுகளும் அதனையே வெளிப்படுத்தின.

இந்நிலையில் தோல்வியடைந்த அரசியல் குழுக்கள் மீண்டும் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செல்ல இனவாதத்தைத் தூண்டி, இனவாதக் கருத்துக்களைப் பரப்பி மக்களைப் பிளவுபடுத்த முற்படுகின்றன.

ஆனால் இனவாதம் மீண்டும் தலைதூக்க அரசு இடமளிக்கப்போவதில்லை. இத்தகைய செயற்பாட்டை ஒடுக்குவதற்குத்தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

எதிர்க்கட்சியிலும் இனவாதத்தைப் புறக்கணிக்கும் எதிர்க்கும் பலர் உள்ளனர். அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார். (ம-7)

## புதிய...

காகக் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கும், புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

பழைய வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கும், புதிய வேட்புமனுக்களைக் கோரி தேர்தல் நடத்தப்பட வேண்டும்எனவும் அண்மையில் சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டது.

அதற்கமைய, புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## இன...

தூண்டி நாட்டை தீக்கிரையாக்கவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என்றார். (ம-7)

## நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

குருநாகல், ஹெட்டிபொல பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை கால்வாய் ஒன்றிலிருந்து குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது.

சீரற்ற வானிலையால் 139,500 குடும்பங்களைச் சேர்ந்த 470,094 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 5674
M 6 0 6 2 1 3
அத சம்பத
M 6 2 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 249
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1704
P 41 43 49 69 P
Double Chance 25203

மெகா பவர்
திகதி 03/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2022
P 07 16 27 29 69
181940

லக்கி 7 VIP
திகதி 2024.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 0500
G 1 1 0 6 3 9 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3916
சீட்டிழுப்பு திகதி 03.12.2024
A 14 15 34 47
A 128284

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 983
மீனம் 08 13 21 34 மீனம்
145058 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.12.2024 வெற்றி வாரம் 382
J 8 9 0 5 6 7
81373
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,581,296.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2648
சீட்டிழுப்பு திகதி 2024.12.03
தினம் செவ்வாய்க்கிழமை
08 28 64 70 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,786,998.40

சனிதா
திகதி 03.12.2024 வெற்றி வாரம் 4809
18 56 57 61 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,145,145.20
ரூ.100,000/- 42855

சசிரி
வெற்றி வாரம் 570
சீட்டிழுப்பு திகதி 03.12.2024
செவ்வாய்க்கிழமை
22 25 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4360
சீட்டிழுப்பு திகதி 03.12.2024
தினம் செவ்வாய்க்கிழமை
15 26 36 59 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,104,419.60
210865

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 36 15 34 35 72
சீட்டிழுப்பு வாரம் 1824
03.12.2024 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,094,669.40

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2474
சீட்டிழுப்பு திகதி: 2024.12.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,250,604.80
19 46 63 71 Y
322688


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

UNICORN FACILITATORS (PVT) LTD.

## UK Visa (வேலைவாய்ப்புகள்)

- 3 வருட Work Visa தொடர்ந்து PR க்கு Apply பண்ணலாம்
- Care givers
- IELTS 5.5 தேவை
- 21750 £ (Stealing Pounds)
- உடனடியாக பயணத்தை ஆரம்பிக்கலாம்.

(2678)

076 0891 614 | Unicorn Facilitators(PVT) Ltd 439 Temple Road, Nallur, Jaffna.

UNICORN FACILITATORS (PVT) LTD.

## வேலைவாய்ப்புகள்

- டென்மார்க் : பட்டதாரி தாதியர்கள் மற்றும் ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள்(MLT)
- கட்டார் : சகல வேலைகளுக்கும்

அழையுங்கள் : 076 0891 614

(2678)

Unicorn Facilitators(PVT) Ltd
439 Temple Road, Nallur, Jaffna.

## Smart Better English

Advanced Level & General English

Grade : 1 - 5, Grade : 6 - 11




Vocabulary Development
Listening Development
Reading Development
Spoken Practice

Basic, Intermediate & Advanced English courses

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், மாணவர்கள், பாடசாலை கல்வி முடித்தவர்கள், வெளிநாடு செல்ல இருப்பவர்கள் எல்லோருக்குமான பேச்சு பயிற்சி ஆங்கிலம் மற்றும் அனைவருக்குமான பொது ஆங்கிலம்.

(2691)



Library Facility & English Club Available

இல. 36, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Call US 077 711 0523

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(594)

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி (A9) வீதியிலிருந்து (300 மீற்றர்) அரியாலைச் சந்தியில் 1.4 பரப்பில் அமைந்துள்ள 3 படுக்கை அறை, 3 குழியலறை, சமையலறை மற்றும் விசாலமான வரவேற்பறைகளையும் மேலும் சகல வசதிகளையும் கொண்ட நல்ல தண்ணி கிணற்றுடன் உள்ள மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (வாகனம் நிறுத்தும் வசதி உண்டு. மாபிள் பதித்த வீடு) விலை - ரூபா ஒரு கோடியே 10 லட்சம்.

தொடர்புகளுக்கு : 077 472 4075

(2675)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-3318)

## வாடகைக்கு உண்டு

கந்தர்மடம் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய மேல் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 248 7320

(2666)

புதிய கல்வியாண்டு - 2025
தரம் 6

## கணிதம்

ஆசிரியர்
திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு ஆரம்பம் : வியாழக்கிழமை (05.12.2024) காலை 8.00 மணி
202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 077 722 2478

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கும் பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சுப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 121 5546

48/=
80/=

(596)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 04 . 1947

மறைவு 04 . 12 . 2019



### அமரர் திருமதி கணபதிப்பிள்ளை கண்மணியம்மா

அம்மா!
கண்மணியே எமக்கு வாழ்வளித்த
கருமணியின் ஒளியே!
ஒலிக்கும் ஒலியாய் அன்பெனும்
நாதத்தால் எமை பக்குவம்
ஆக்கிய எம் உன்னத உயிரே ! ஏனம்மா
உன் கருவிழியை மூடி
எம் கருவிழியை திறந்து மடை
வெள்ளம் ஆக்கினாய் - இன்று
நாம் பொலிவடைந்து நிற்கின்றோம்
உங்கள் நினைவுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 12 . 1981

மறைவு 05 . 05 . 2006



### அமரர் கணபதிப்பிள்ளை கலாமதி (அபிராமி)

(கணக்காய்வாளர் இ.போ.ச யாழ்./வவுனியா)

பாசமான சகோதரியே!
உன் இழப்பில் கதி கலங்கி கண்ணீர் உதித்து
பதினெட்டாண்டு சென்றுவிட்டதே - ஆனாலும்
கண்களில் நின்று கண்ணீர் ஓயவில்லை
உன் நினைவும் எம் மனக் கண்முன் நின்று
மறையவே இல்லை
நின் பெருமையெல்லாம் மண்ணுக்குள்
புதைந்து விட்டது என்று எண்ணினோம்
ஆனால் நீ எல்லோரினதும்
உள்ளத்திலும் ஒளிர்கின்றாய்

உங்கள் நீங்கா நினைவுடன்
மும்மூர்த்திகளாகிய புத்திரர்கள்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்

"குருந்தடி வீதி"
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

உங்கள் நீங்கா நினைவுடன்
பாச அண்ணன்மார்,
அண்ணிமார், மருமக்கள்

(592)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.